# குழந்தை பற்றிய தகவலைப் பகிர்தல்
# Child Information Sharing

Tamil | தமிழ்

## எனது தகவலை ஏன் நீங்கள் பகிர விரும்புகிறீர்கள்?

**விக்டோரியக் குழந்தைகளைப் பராமரித்தல்**

அனைத்து விக்டோரியக் குழந்தைகளும் தமது வாழ்க்கையைப் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ உதவுவதற்காக, குழந்தைகளுடன் பணிபுரியும் சில தொழில் சார் வல்லுநர்கள் தகவல்களைப் பகிரும் முறையை விக்டோரியா அரசாங்கம் மேம்படுத்தி வருகிறது.

பல சேவைகள் ஏற்கனவே தகவல்களைப் பகிர்ந்துள்ளன. குழந்தைத் தகவல் பகிர்வுத் திட்டம் (Child Information Sharing Scheme [CISS]) இந்தத் தொழில் சார் வல்லுநர்கள் தாங்கள் பணிபுரியும் குழந்தையின் முழுமையான விவரத்தை அறிந்து கொள்வதை எளிதாக்குகிறது, அவர்கள் எதைப் பகிரலாம், மேலும் குடும்பத்தின் தனியுரிமையைப் பாதுகாப்பது எப்படி என்பனவற்றைப் புரிந்துகொள்ள உதவுகிறது,.

### அது குடும்பங்களுக்கு எப்படி உதவுகிறது?

பல குழந்தைகளுக்கு அவர்களின் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் ஆதரவு தேவைப்படும். அவர்கள் பிறந்த காலம் தொட்டு, 18 வயது அடையும் வரை, குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்கள், தொழில் சார் வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து மேலான ஆதரவைப் பெற, குழந்தைகள் தகவல் பகிர்வு சீர்திருத்தங்கள் உதவுகின்றன.

### அது தொழில் சார் வல்லுநர்களுக்கு எவ்வாறு உதவுகிறது?

'குழந்தைத் தகவல் பகிர்வு' என்பது குழந்தைகளை ஆதரிக்கும் மற்றும் பராமரிக்கும் தொழில் சார் வல்லுநர்கள் (ஆசிரியர்கள் மற்றும் செவிலியர்கள் போன்றவர்கள்) குழந்தை பற்றிய தங்களது அறிவை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள உதவுகிறது, அதே நேரத்தில் எதைப் பகிர வேண்டும் மற்றும் குடும்பத்தின் தனியுரிமையை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றிய வழிகாட்டுதல்களையும் அது வழங்குகிறது.

## எடுத்துக்காட்டு:



தாஜ் (Taj) தற்போதுதான் பள்ளி மாறியுள்ளார். அவர் வகுப்பில் பேசத் தயங்குவதையும், அவருடைய பள்ளிப் பாடங்களை முடிப்பதில் சிக்கல் இருப்பதையும் அவருடைய புதிய ஆசிரியை சாரா (Sarah) கவனிக்கிறார். தாஜின் முன்னாள் பள்ளியிலிருந்து தகவலைக் கோருவதன் மூலம், சாரா அவருக்கு 'எழுத்துக் கோர்வை மறதி நோய்' (dyslexia) இருப்பதை அறிந்துகொள்கிறார், இந்தக் குறைபாடுதான் அவர் வகுப்பில் பங்கேற்கத் தயங்குவதற்குக் காரணமாக இருக்கிறது.

**தாஜின் கற்றல் தேவைகளை ஆதரிக்கும் பாடத் திட்டத்தை உருவாக்க தாஜின் ஆசிரியரை இது அனுமதிப்பதால், 'குழந்தைத் தகவல் பகிர்வு' மூலம் பகிரக்கூடிய தகவலுக்கு இது ஓர் எடுத்துக் காட்டாகும்.**

# யாருடன் நீங்கள் அதைப் பகிர்ந்து கொள்கிறீர்கள்? அது எவ்வாறு பயன்படுத்தப்படும்?

## பகிரப்பட்ட தகவல் வகை

குழந்தைகளின் நல்வாழ்வு அல்லது பாதுகாப்பை ஆதரிக்கும் எந்தத் தகவலையும் பகிரலாம். இது குழந்தை பெறுகின்ற தொழில் சார் நிபுணத்துவ ஆதரவு அல்லது குடும்ப உறவுகளைப் பற்றிய நுண்ணறிவு போன்ற தகவல்களாக இருக்கலாம்.

**இத்தகவல் பின்வரும் காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது:**

- **நீங்கள் உங்கள் கதையை இரண்டு முறை சொல்ல வேண்டியதில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள**
- **உதவக்கூடிய சரியான நபர்களை ஈடுபடுத்த**
- **முழுமையான விவரங்களைப் பார்க்க**
- **குழந்தைகளின் மேம்பாட்டுக்கு உதவிட**

## யாரெல்லாம் தகவலைப் பகிர முடியும் மற்றும் அணுக முடியும்?

சில நபர்களுக்கு மட்டுமே தகவலைப் பகிர்ந்து கொள்ளும் அதிகாரம் உள்ளது - எல்லோருக்கும் இல்லை. ஆசிரியர்கள், மருத்துவர்கள், சமூகப் பணியாளர்கள் மற்றும் ஆலோசகர்கள், செவிலியர்கள் மற்றும் காவல்துறையினர் போன்ற இவர்கள்தான் குழந்தைகளைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் கடமைப்பட்ட தொழில் சார் வல்லுநர்களாகும்.

## எடுத்துக்காட்டு:



லிசா (Lisa) ஒரு பள்ளிச் செவிலியர்; அவர் ஆலிஸ் (Alice) உடன் சேர்ந்து பணிபுரிகிறார். அத்துடன் அவரது ஐந்து வயது மகள் ஜாஸ்மினுக்கு (Jasmine) இதயத்தில் ஒரு சிறிய பிரச்சினை உள்ளது. ஜாஸ்மின் ஆரம்பப் பள்ளியைத் தொடங்கும்போது, லிசா ஆலிஸுடன் பேசி அதன் பின், ஜாஸ்மினின் உடல்நிலை குறித்த தேவைகளைத் தாங்கள் அறித்திருப்பதை உறுதிசெய்வதற்காக, அவள் பற்றிய தகவல்களை அவளது ஆரம்பப் பள்ளியின் செவிலியரிடம் பகிர்ந்துகொள்வது குறித்து அவளது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுகிறார். தகவலைப் பகிர்வதற்கு முன்பு ஆலிஸின் கருத்துக்களை லிசா அறிந்திருக்கிறார்.

**ஒரு தொழில் சார் நிபுணர் எப்போது தகவலைப் பகிரலாம், யாருடன் பகிரலாம் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.**

# தகவலை எப்போது பகிரலாம்?

## பின்வரும் காரணங்கள் இல்லாத பட்சத்தில் தகவலைப் பகிர முடியாது:

1. இது குழந்தையின் (அல்லது குழந்தைகளின் குழு) நல்வாழ்வை அல்லது பாதுகாப்பை மேம்படுத்தப் பயன்படுத்தப்படும்.
2. பகிர்தலானது குழந்தைகளுக்குச் சேவைகளை வழங்குதல், திட்டங்களை உருவாக்குதல் அல்லது குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களை விசாரணை செய்தல் அல்லது மேலாண்மை செய்தல் போன்றவற்றில் உதவும்.
3. இது யாருக்கும் அபாயத்தை ஏற்படுத்தாது, சட்டப்பூர்வமாக தடைசெய்யப்படாது அல்லது விதிமுறைகளின் கீழ் விலக்கப்படாது.

தகவலைப் பகிருமுன், நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளின் முழுப் பட்டியலுக்குப் பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்: www.infosharing.vic.gov.au

## தகவல் எவ்வாறு பகிரப்படுகிறது?

சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தொழில் சார் வல்லுநர்கள் தகவலைக் கேட்கலாம் அல்லது அதைப் பகிர முடிவு செய்யலாம்.

## தகவல்களை அந்தரங்கமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருத்தல்

குழந்தைகளின் தகவல்களைப் பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் வைத்திருப்பதை உறுதி செய்வது அவர்களைப் பாதுகாப்பது என்பதன் ஒரு பகுதியாகும். 'குழந்தைத் தகவல் பகிர்வு' தற்போதுள்ள தனியுரிமைச் சட்டங்களை ஆதரிக்கிறது. இது அந்தச் சட்டங்களின் கீழ் எப்போது தகவல்களைப் பகிரலாம் என்பதைத் தொழில் சார் வல்லுநர்களிடம் கூறுவதன் மூலம் செயல்படுத்துகிறது. இரகசியத் தகவல்களைத் தேவையில்லாதபோது பகிர்வது குற்றமாகும். அத்துடன், அனைத்துத் தகவல்களும் தனிப்பட்ட நிறுவனங்களால் கட்டாயம் பாதுகாப்பாகச் சேமிக்கப்பட வேண்டும். அந்த அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது, எனவே அவர்கள் தங்கள் பொறுப்புகளை அறிந்திருக்கிறார்கள்.

## எடுத்துக்காட்டு:

ஆண்டி (Andy) ஒரு சமூக ஆதரவாளர், அவர் லீ (Lee) பற்றிய தகவலைப் பகிர்ந்து கொள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியின் சேர்க்கை அதிகாரியிடம் இருந்து கோரிக்கை ஒன்றைப் பெறுகிறார். லீயின் குடும்பம் சிறிது காலம் வீடற்ற நிலையில் இருந்தபோது ஆண்டி அவர்களுக்கு ஆதரவளித்தார். லீ மற்றும் அவரது குடும்பத்தினருடன் கலந்தாலோசித்த பிறகு, ஆண்டி அவர்களின் வாழ்க்கை நிலைமை பற்றிய தகவலைப் பகிர்ந்து கொள்ளவில்லை, ஏனெனில் லீயைப் பள்ளியில் சேர்ப்பதைத் தவிர்ப்பதற்கு இது பயன்படுத்தப்படலாம் என்று அவர் சந்தேகிக்கிறார்.

**தொழில் சார் வல்லுநர்கள் தகவலைப் பகிர்ந்து கொள்ள முடியாததற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும் - சேர்க்கை அலுவலர் ஓர் அங்கீகரிக்கப்பட்ட தொழில் சார் வல்லுநர் அல்ல, மேலும் லீ அல்லது அவரது குடும்பத்தினரின் நல்வாழ்வு அல்லது பாதுகாப்பிற்கு உதவுவதற்காக இத்தகவல் பயன்படுத்தப்படுவதில்லை.**

# புகார்கள்

## அனுமதி இல்லாத வகையில் தகவல் பகிரப்பட்டிருக்கலாம் என்று நீங்கள் கவலைப்படும் பட்சத்தில், கருத்து தெரிவிக்கவும் புகார் ஒன்றைக் கொடுக்கவும் உங்களுக்கு உரிமை உண்டு.

**புகார் ஒன்றைக் கொடுக்குமுன் முதலில் இந்தத் தகவலைப் பகிர்ந்த நிறுவனத்துடன் பேசவும். அனைத்து நிறுவனங்களும் புகார்களைக் கையாள்வதற்கான நடைமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.**



## பிரச்சினை தீர்க்கப்பட்டதில் நீங்கள் திருப்தியடையவில்லை என்றால், பின்வரும் வழியில் புகார் ஒன்றைக் கொடுக்கலாம்:

**தனிப்பட்ட தகவல் தொடர்பான புகார் என்றால் விக்டோரியா தகவல் ஆணையர் அலுவலகம் (Office of the Victorian Information Commissioner)**

இணையதளம்: ovic.vic.gov.au / தொலைபேசி: 1300 666 444

**சுகாதாரத் தகவல் தொடர்பான புகார் என்றால், சுகாதாரப் புகார்கள் ஆணையர் (Health Complaints Commissioner)**

இணையதளம்: hcc.vic.gov.au / தொலைபேசி: 1300 582 113

## குழந்தைத் தகவல் பகிர்வுத் திட்டத்தைப் பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் அறிய விரும்பினால், நீங்கள்:

**எங்களை அழைக்கவும்:** 1800 549 646

**எங்களுக்கு எழுதவும்:** CISandFVIS@education.vic.gov.au

**பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும்:**
vic.gov.au /child-information-sharing-scheme